மாண்புமிகு திரு. செ. மாதவன்: இனிமேல் புதியதாக வற்புறுத்தவேண்டாம் அது தான் மத்திய அரசாங்கத்தின் கொள்கை.

திரு. நா. வீராசாமி: ராமநாதபுரத்தில் தொடங்க இருக்கிற ரப்பர் தொழிற்சாலையில் என்னென்ன பொருள்கள் தயாரிக்க இருக்கிறார்கள்? லாரி, பஸ், கார் டயர் ட்யூப்கள், மற்றும் சைகிள் டயர், ட்யூப்கள் அல்லது வேறு என்னென்ன பொருள்கள் தயாரிக்கிறார்கள் என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதல் கட்டமாக அவர்கள் சொன்னது தான், அதாவது லாரி, பஸ் டயர், ட்யூப்ஸ். இரண்டாவது கட்டமாக சைகிள் டயர், ட்யூப்ஸ் செய்யவேண்டும் என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

Encroachment of Government lands in Gudalur taluk

* 486 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. Minister for the Kerala Government met the Hon. Minister for Public Works about 27th August 1971 in connection with Gudalur evictions; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் பந்தலூர் பிர்க்காவிலுள்ள அரசு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களின் பிரச்சினைகளைத் தமிழ்நாடு அரசு அனுதாபத்துடன் கவனிக்கும்படி கேரள மாநில வருவாய்த் துறை அமைச்சர் வேண்டிக் கொண்டார்.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether any concrete steps have been formulated to avoid such conflicts in future?

THE HON. THIRU S. J. SADIQ PASHA' So far as I know, there are no conflicts.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, கூடலூர் நிலமற்ற விவசாயிகளுக்கு 3 ஏக்கரா வரை நிலம் கொடுப்பதாக அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. இதுவரையில் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வியை வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குப் போடவேண்டும்.

1972 மார்ச் 14]

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புச் செய்தவர் களுக்கு 3 ஏக்கரா கொடுப்பதற்கு அரசாங்க ஆணையிருந்தும் இப்பொழுதும் 2 சென்டு, 3 சென்டு நிலங்கள் ஒதுக்குவதாக புகார்கள் வந்திருப்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி புகார் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட புகார் இருக்குமாயின் வருவாய்த் துறை அமைச்ச ருக்கு எழுதி அனுப்பினுல், நடவடிக்கை எடுக்கப்படும்.

Inspection Bungalow for Pallipet

* 487 *Q.*—Thiru E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned the construction of Inspection Bungalow at Pallipet in Chingleput district; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் உள்ள பள்ளிப்பேட்டையில் ஒரு ஆய்வாளர் மாளிகையைக் கட்டும் செயற்குறிப்புக்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ஈ. எஸ். தியாகராஜன் : அது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பள்ளிப்பட்டு கிராமத்தில் சர்வே நம்பர் 125- இந்தக் கட்டம் கட்ட வேண்டும் என்று செயற்கிறிப்பு இருந்தது. ஆனல், கிராம மக்கள் ஆட்சேபணை செய்து வேறு இடம் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை ஆர்ஜிதம் செய்வ தற்கு கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறுர்கள். ஆர்ஜித நடவடிக்கை பூர்த்தியான பிறகு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இப்படி பயணிகள் மாளிகை எந்தெந்த மாவட்டத்தில் கட்ட அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

°விடை இல்லை.